பொருளடக்கம்

❀

குகைவாசிகள் கொள்கைப் பாதை 11

குகைவாசிகள் பதிப்பகப் பாதை 18

மூலநூல் பதிப்புரை 25

ஆய்வறிஞர்கள் முன்னுரை 27

இப்னு ஹிஷாம் ﵀ வாழ்க்கைக் குறிப்பு 31

ஆசிரியர் வாழ்க்கைக் குறிப்பு 33

பகுதி 1: முற்கால, பிற்கால மக்களின் வரலாறுகள் 45

1 அறிமுகம் 47

2 இறைத்தூதர் ஆதம் ﵇ மற்றும் இப்லீஸின் வரலாறு 49

3 ஆதம் ﵇ அவர்களின் சந்ததி வரலாறு 54

4 ஓரிறை வழிபாட்டில் பல தெய்வ வழிபாடு தோன்றிய வரலாறு 56

5 முற்கால மக்களது வரலாறுகளின் முக்கியத்துவம் 60

6 இப்றாஹீம் ﵇ சரித்திரம் 62

7 இப்றாஹீம் ﵇ சமயத்தை அம்ரு இப்னு லுஹை மாற்றிய வரலாறு 77

8 அறியாமைக் காலத்தின் பழமையான சிலைகள் மனாத், லாத், உஸ்ஸா 80

9 கஅபாவின் பொறுப்பை ஜுர்ஹுமிடம் ஒப்படைத்தல் 84

10 ஹில்ஃபுல் ஃபுளூல் 92

11 அல்ஹும்ஸ் சரித்திரம் 95

12 வஹ்யி உடைய துவக்கம் 105

13 மதீனாவில் அறப்போர் பற்றிய கட்டளை 120

பகுதி 2: மதமாறியவர்களை எதிர்த்துப் போர் 125

1 முதல் சான்று: அபூ பக்ர் ﵁ செயல்பாடு 127

2 இரண்டாவது சான்று: நேர்மையான கலீஃபாக்களின் காலத்தில் நிகழ்ந்த மற்றொரு வரலாறு 135

3 மூன்றாவது சான்று: நேர்மையான கலீஃபாக்களின் காலத்தில் நிகழ்ந்த சம்பவங்கள் 138

4 நான்காவது சான்று: நபித்தோழர்கள் காலத்தில் நடந்த சம்பவங்கள் 140

5 ஐந்தாவது சான்று: நபித்தோழர்களை நேரில் கண்டு பின்பற்றிய மக்களின் காலத்தில் நடந்த நிகழ்ச்சி 142

6 ஆறாவது சான்று: பனூ உபைது அல்கத்தாஹ்வின் வரலாறு 144

7 ஏழாவது சான்று: தாத்தாரிகளின் வரலாறு 147

பகுதி 3: நபிகளாரின் பிறப்பும் வளர்ப்பும் 151

1 நபிகளார் ﷺ அவர்களின் வமிசப் பட்டியல் 153

2 யானைப்படை வரலாறு 155

3 நபிகளாரின் தந்தை அப்துல்லாஹ் மரணம் 161

4 அப்துல் முத்தலிப் - நபிகளாரின் பாட்டனார் 163

5 அபூ தாலிப் - நபிகளாரின் பெரிய தகப்பனார் 172

6 அறியாமைக் கால மக்களின் நம்பிக்கைகள் 183

பகுதி 4: நபித்துவம் வழங்கப்படல் 193

1 வஹ்யி உடைய தொடக்கம் 195

2 அழைப்பின் தொடக்கம் 210

3 அபிசீனியாவிற்கு முதல் ஹிஜ்றத் 215

4 பனூ ஹாஷிம் குலத்தினரைப் புறக்கணித்தல் 233

5 ஆன்மா குறித்தும் குகைத்தோழர்கள் குறித்தும் அவர்களது கேள்வி 247

6 குர்ஆனை சூனியமென்று விமர்சித்த வலீது இப்னுல் முகீறா 252

7 நிலவைப் பிளத்தல் 257

பகுதி 5: மக்காவுக்கு வெளியே அழைப்புப்பணி 275

1 தாயிஃபு நகருக்கு நபிகளாரின் பயணம் 277

2 இஸ்ராவும் மிஅராஜும் 282

பகுதி 6: ஹிஜ்ரா ஏற்பாடுகள் 285

1 முதல் அகபா உடன்படிக்கை 287

2 அகபாவில் இரண்டாவது உறுதிமொழிப் பிரமாணம் 295

3 ஹிஜ்ரா - மதீனாவுக்கு இடம்பெயர்தல் 304

4 ஸுறாக்கா இப்னு மாலிக்கின் வரலாறு 317

5 உம்மு மஅபது வரலாறு 319

பிரிவு 7: மதீனாவில் வரவேற்பு 325

1 நபிகளார் மதீனாவில் நுழைகின்றார் 327

2 மஸ்ஜிது கட்டப்படுதல் 333

3 அன்ஸார்களுக்கும் முஹாஜிர்களுக்கும் இடையே சகோதரத்துவம் 336

4 முதல் ஆண்டு நிகழ்வுகள் 340

5 இரண்டாம் ஆண்டின் நிகழ்வுகள் 342

பகுதி 8: மதீனாவின்மீது எதிரிகளின் கண் 347

1 ரஸூல் ﷺ மதீனாவில் குடியேற்றம் 349

2 நபிகளாரால் கட்டப்பட்ட முதல் போர்க்கொடி 353

3 ஃபித்னா என்பதன் பொருள் 358

பகுதி 9: பத்ரு போர் 361

1 சத்தியத்தையும் அசத்தியத்தையும் பிரித்துக்காட்டிய நாளில் மாபெரும் பத்ருப்போர் 363

2 பத்ர் போரில் கைப்பற்றிய பொருள்களைப் பங்கிடுதல் 380

3 பத்ருப் போர் கைதிகள் 382

பகுதி 10: உஹுது போர் 387

1 உஹுதுப் போர் 389

2 அவதூறு பற்றிய வரலாறு 408

பகுதி 11: அஹ்ஸாப் போர் 417

1 அஹ்ஸாப் - கூட்டுப்படையினர் யுத்தம் 419

பகுதி 12: ஹுதைபிய்யா உடன்படிக்கை 435

1 ஹுதைபிய்யா உடன்படிக்கை 437

2 கைபர் போர் 453

3 மூஃதா போர் 463

பகுதி 13: மக்கா வெற்றி 469

1 மகத்தான வெற்றிப் போர் 471

பகுதி 14: மக்கா வெற்றிக்குப் பின் 493

1 ஹுனைன் போர் 495

2 தாயிஃப் போர் 509

3 ஸகீஃப் கிளையினரின் வருகை 512

பகுதி 15: மதீனா திரும்பியப் பின் 517

1 ஒன்பதாம் ஆண்டின் நிகழ்வுகள் 519

2 கஅப் இப்னு ஸுஹைர் ﵁ வரலாறு 523

3 தபூக் போர் 529

பகுதி 16: நபிகளாரைச் சந்தித்த அறபியர்களின் தூதுக்குழுக்கள் 543

1 பனூ தமீம் குழு வருகை 545

2 பனூ ஹனீஃபா தூதுக்குழுவும் அதில் முஸைலமாவும் 553

3 அபூ பக்ர் ﵁ தலைமையில் ஹஜ்ஜுப் பயணம் 555

பகுதி 17: இறுதி ஹஜ்ஜு 557

1 நபிகளாரின் இறுதி ஹஜ்ஜுப் பயணம் 559

2 அல்பல்காவுக்கு உஸாமா இப்னு ஸைது ﵁ அனுப்பப்படுதல் 561

3 நபிகளாரின் சுகவீனம் 563

4 நபிகளார் ﷺ மரணம் 567

பகுதி 18: நபிகளார் மரணத்திற்குப் பின் 571

1 அஸ்ஸகீஃபா (ஒன்றுகூடுமிடம்) வரலாறு 573

2 அபூ பக்ர் ﵁ அவர்களுக்கு மக்கள் விசுவாச உறுதிமொழி அளித்தல் 580

பகுதி 19: அபூ பக்ர் ﷺ ஆட்சிக்காலம் 583

1 அபூ பக்ர் அஸ்ஸித்தீக் ﷺ சிறப்பும் அவரது நேரிய கிலாஃபத்தும் 585

2 இஸ்லாமைவிட்டு வெளியேறிய மதமாறிகள் வரலாறு 587

3 அதீ இப்னு ஹாதிம் ﷺ மூலமாக அல்லாஹ் 'தய்'க்கு உதவினான் 592

4 இஸ்லாமிலிருந்து மதமாறியோருக்கு எதிரான போர் 594

5 அபூ பக்ர் ﷺ தனது தளபதிகளுக்கு எழுதிய கடிதம் 597

6 புஸாகா மற்றும் பிற இடங்களுக்கு காலிதின் படையெடுப்பு 601

7 பனூ ஆமிர் குலத்தினரும் மற்றவர்களும் இஸ்லாமுக்குத் திரும்பிய வரலாறு 609

8 யமாமாவின்மீது காலித் ﷺ படையெடுப்பு 613

9 பொய்யன் முஸைலமா மூலமாக வழிகெட்டவர்கள் 617

10 அல்புதாஹ்விலிருந்து காலித் ﷺ ஒற்றர்களை அனுப்புதல் 627

11 பனூ ஸுலைம் மதமாறிகளின் வரலாறு 638

12 பஹ்ரைன் மக்கள் மதமாறிய வரலாறு 644

13 ஓமான் மற்றும் தபா மக்கள் மதமாறிகளான வரலாறு 652

14 ஹிஜ்ரீ 12 656

15 ஹிஜ்ரீ 13 657

பகுதி 20: உமர் ﷺ ஆட்சிக்காலம் 661

1 ஹிஜ்ரீ 14 663

2 ஹிஜ்ரீ 15 665

பகுதி 21: உஸ்மான் ﷺ ஆட்சிக்காலம் 673

1 ஹிஜ்ரீ 24 675

பகுதி 22: அலீ ﷺ ஆட்சிக்காலம் 685

1 ஹிஜ்ரீ 36 687

பகுதி 23: நேர்வழி காட்டப்பட்ட கலீஃபாக்களின் காலத்திற்குப் பின் 697

1 நேர்வழி காட்டப்பட்ட கலீஃபாக்களின் காலத்திற்குப் பின் 699

பகுதி 24: அப்பாஸியாக்கள் ஆட்சிக்காலம் 707

1 பனூ அல்அப்பாஸின் ஆட்சி 709

2

இறைத்தூதர் ஆதம் ﷺ மற்றும் இப்லீஸின் வரலாறு

❀

தனக்குக் கீழ்ப்படிந்தவர்களையும் கீழ்ப்படியாதவர்களையும் அல்லாஹ் எவ்வாறு நடத்தினான் என்பதை முற்கால, பிற்கால மக்களின் சரித்திரங்களை நல்ல அறிவுடன் வாசிக்கின்ற யாராக இருந்தாலும் தெரிந்துகொள்ள முடியும். ஆனால், அவற்றைச் சிந்தித்துப் பார்க்காதவர்கள், அவற்றிலிருந்து படிப்பினை பெறாத வர்கள், இவர்களை ஒன்றும் செய்ய இயலாது. இதுபற்றி அல்லாஹ் குர்ஆனில்[6] கூறுகின்றான்:

وَكَمْ أَهْلَكْنَا قَبْلَهُمْ مِنْ قَرْنٍ هُمْ أَشَدُّ مِنْهُمْ بَطْشًا فَنَقَّبُوا فِي الْبِلَادِ هَلْ مِنْ مَحِيصٍ

மக்காவின் இந்த இணைவைப்பாளர்களுக்கு முன்னர் நாம் எத்தனையோ சமூகங்களை அழித்திருக்கிறோம். அவர்கள் வேதனையிலிருந்து தப்பிப்பதற்காகப் பல நாடுகளில் சுற்றித் திரிந்தார்கள். ஆயினும், அவர்களால் தப்பிப்பதற்கான இடத்தைப் பெற முடியவில்லை. (குர்ஆன் 50:36)

---

6 குர்ஆன் (القرآن): மொழி வழக்கில் குர்ஆன் என்றால் ஓதப்படுவது, படிக்கப்படு வது அல்லது தொகுக்கப்பட்டது எனப் பொருள். மார்க்க வழக்கில் குர்ஆன் என்பது அல்லாஹ்வின் பேச்சு. அதை அவன் தன்னுடைய வானவர் ஜிப்ரீல் ﷺ வழியாக தன்னுடைய இறுதித்தூதர் முஹம்மது ﷺ அவர்களின் நெஞ்சத்தில் இறக்கினான். அவர்கள் நபியாக நியமிக்கப்பட்ட 40ஆம் வயதிலிருந்து அவர்கள் மரணித்த 63ஆம் வயது வரை சுமார் 23 வருடங்கள் அவர்களுக்கு குர்ஆனின் வசனங்கள் சிறுகச் சிறுக இறக்கப்பட்டன. அவை சிறிதும் பெரிதுமான 114 அத்தியாயங்களாக எழுதிப் பாதுகாக்கப்பட்டு தொகுக்கப்பட்டன. இஸ்லாமிய நம்பிக்கைகளுக்கும் சட்டங்களுக்கும் முதன்மை ஆதாரமான இதை முழு உலக மக்களுக்கும் நேர்வழியின் இறுதி வேதமாக அல்லாஹ் ஆக்கியுள்ளான். (ப.கு.)

4

ஓரிறை வழிபாட்டில் பல தெய்வ வழிபாடு தோன்றிய வரலாறு

❀

ஆதம் ﷺ இறந்த பின்னர் அவரது சந்ததிகள் பத்து நூற்றாண்டுகள் அவருடைய சமயத்தைப் பின்பற்றி வாழ்ந்து வந்தார்கள். அதாவது, இஸ்லாமைப் பின்பற்றி வந்தார்கள். பின்னர், அவர்கள் ஓரிறையான அல்லாஹ்வுக்கு இணைவைத்து பல தெய்வ வழிபாட்டுக் காரியங்களைச் செய்து இறைநிராகரிப்பில் விழுந்துவிட்டார்கள். அவர்களின் நிராகரிப்பிற்குக் காரணம், அவர்கள் தங்களின் வமிசத்தைச் சேர்ந்த நல்லடியார்கள்மீது கொண்டிருந்த நேசமே ஆகும். இதுபற்றி அல்லாஹ் கூறுகின்றான்:

وَقَالُوا لَا تَذَرُنَّ آلِهَتَكُمْ وَلَا تَذَرُنَّ وَدًّا وَلَا سُوَاعًا وَلَا يَغُوثَ وَيَعُوقَ وَنَسْرًا

(இறைத்தூதர் நூஹின் காலத்தில் அவருக்கு எதிராகப் பல தெய்வ வழிபாட்டை ஊக்குவித்து பிரச்சாரம் செய்தவர்கள்) கூறினார்கள்: 'உங்களின் தெய்வங்களை வணங்குவதை விட்டுவிடாதீர்கள். வத்து, சுவாவு, யகூசு, யஊக்கு, நஸ்ர் ஆகிய தெய்வங்களை வணங்கிவழிபடுவதையும் விட்டுவிடாதீர்கள்.' (குர்ஆன் 71:23)

இந்த வசனத்தில் குறிப்பிடப்படும் ஐந்து நபர்களும் நபி நூஹ் ﷺ அவர்களின் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள். (இவர்கள் சிலைகளாக வணங்கப்படுவதற்கு ஓரிரு தலைமுறைக்கு முன்பு வாழ்ந்தவர்கள்.) தாங்கள் வாழ்ந்த காலத்தில் இவர்கள் தங்கள் மக்களை நற்செயல்களைச் செய்யுமாறு ஏவிக்கொண்டும், பாவங்களை விட்டு விலகுமாறு தடுத்துக்கொண்டும் இருந்தவர்கள். இவர்கள் அனைவரும் ஒரே மாதத்திற்குள் அடுத்தடுத்து இறந்ததைக் கண்டு, அவர்கள் போதனை செய்துவந்த சன்மார்க்கம் (இஸ்லாம்) அழிந்துவிடுமே என்று அச்சப்பட்டு, அவர்களின் நினைவாகச் சிலைகளை அவர்களின் தோழர்கள் நிறுவினார்கள். அவற்றை நினைவுக்காக மக்கள் பார்க்கும்படியான இடங்களில் அமைத்தார்கள். அவற்றை அவர்கள்

7

இப்றாஹீம் ﷺ சமயத்தை அம்ரு இப்னு லுஹை மாற்றிய வரலாறு

❀

அம்ரு இப்னு லுஹை என்பவன் தனது நேர்மையான செயல்பாடுகள் மூலமாக தன்னுடைய மக்களிடம் புகழ் பெற்றிருந்தான். அவனுடைய தானதர்மங்களைக் கண்டும், சமயக் கொள்கைகளில் அவன் காட்டிய மிகக் கவனமான அணுகுமுறை காரணமாகவும் மக்கள் அவன்பால் மிகுந்த அன்பு செலுத்தினார்கள். அவனுக்குக் கீழ்ப்படிந்து வாழ்ந்து அவனைத் தங்களது மன்னனாகவும் ஆக்கிக்கொண்டார்கள். மக்காவின் ஆட்சியும் கஅபாவின் பாதுகாப்பும் அவன் பொறுப்பின் கீழ் வந்தன. மக்கள் அவனை மிகப் பெரிய அறிஞர்களில் ஒருவனென்றும் சிறந்த பாதுகாவலன் என்றும் கருதினார்கள். ஷாம் தேசத்திற்கு அவன் பயணம் மேற்கொண்டிருந்தபோது அங்குள்ள மக்கள் சிலைகளை வணங்குவதைக் கண்டான். அது ஒரு நல்ல செயலாகவும் சரியான வழிமுறையாகவும் அவனுக்குத் தோன்றியது. ஷாம் தேசம் தூதர்கள் வாழ்ந்த இடமாகவும் பல புனித வேதங்கள் வெளிப்படுத்தப்பட்ட இடமாகவும் இருந்ததால், அங்கு வாழ்ந்த மக்கள் ஹிஜாஸ் மற்றும் பிற பகுதிகளில் வாழ்கின்ற மக்களைவிடவும் உயர்வானவர்களாகத் தங்களைக் கருதிக்கொண்டார்கள். இது போன்ற சூழ்நிலைகளால் கவரப்பட்ட அவன் மக்காவுக்குத் திரும்ப வரும்போது தன்னுடன் ஹுபுல் எனும் சிலையைக் கொண்டு வந்து, அதனைக் கஅபாவினுள் வைத்தான். மக்காவாசிகளிடம் அச்சிலையை அல்லாஹ்வுக்கு இணையாக ஆக்கிக்கொள்ளுமாறு கூறினான். மக்களும் அதன்படி நடந்தார்கள். ஹிஜாஸ் பகுதியைச் சேர்ந்த மக்கள் சமய விவகாரங்களில் மக்காவாசிகளையே பின்பற்றி வந்தார்கள். ஏனெனில், அவர்கள்தாம் கஅபாவின் பாதுகாவலர்களாகவும் அந்தப் புனித இடத்தில் வாழ்ந்து வருபவர்களாகவும் இருந்தார்கள். எனவே, மக்காவாசிகளின் சமய நம்பிக்கை சரியாகத்தான் இருக்கும் என்று நம்பி அதனைப் பின்பற்றினார்கள். அல்லாஹ் தனது தூதரான நபிகளார் ﷺ அவர்களை

அந்நஜ்ம் அத்தியாயத்தை நபி ﷺ ஓதியபோது குறைஷிகளின் நிலை

நபிகளார் ﷺ அவர்கள் அந்நஜ்ம் அத்தியாயத்தை குறைஷிகள் முன்னிலையில் ஓதியபோது என்ன நிகழ்ந்தது என்ற வரலாறும் விளக்கப்பட்டுள்ளது. அல்லாஹ் கூறுகின்றான்:

أَفَرَأَيْتُمُ اللَّاتَ وَالْعُزَّى وَمَنَاةَ الثَّالِثَةَ الْأُخْرَى

இணைவைப்பாளர்களே! அல்லாஹ்வை விடுத்து நீங்கள் வணங்குகின்ற சிலைகளான லாத், உஸ்ஸா மற்றும் மூன்றாவது சிலையாகிய மனாத் ஆகியவற்றைக் குறித்து எனக்கு அறிவியுங்கள். அவை உங்களுக்குப் பலனளிக்கவோ தீங்கிழைக்கவோ சக்தி பெறுகின்றனவா? (சூர்ஆன் 53:19,20)

இவ்வசனங்களை ஓதும்போது ஷைத்தான் நபியவர்களின் நாவில், 'அவர்கள் மிக உயர்ந்து பறக்கும் பறவைகள். அவர்களின் பரிந்துரையை ஆதரவு வைக்க வேண்டும்' எனும் வார்த்தைகளைப் போட்டான். நபிகளார்தாம் தங்களிடம் இப்படிப் பேசுகிறார்கள் என்று நம்பிய குறைஷிகள், அதில் பெரும் திருப்தியடைந்தார்கள். அவர்களிடையே இருந்த முதியவர்களும் இளைஞர்களும் அதை ஏற்றுக்கொண்டு, 'நாங்கள் விரும்புவது இதுதான். அல்லாஹ்தான் நம்மைப் படைத்துப் பரிபாலித்துக் காக்கின்றான் என்பதை நாங்கள் உறுதிப்படுத்துகின்றோம். ஆனால், எங்களுக்காக அல்லாஹ்விடம் இவர்கள் பரிந்துரை செய்ய வேண்டுமென விரும்புகிறோம். இதனை அவர் ஏற்றுக்கொண்டால், பின் அவருக்கும் எங்களுக்கும் இடையில் எந்தவிதமான பிரச்சினையும் இல்லை' என்கிற தொனியில் பதில் கூறினார்கள்.[34]

---

34 இந்தச் சம்பவம் குறித்த அறிவிப்பு பொய்யானதாகும். இப்னு கஸீர் ﷺ அவர்களும் இன்னும் பிறரும் 'இச்செய்தி தொடர்பாக நபியவர்களிடமிருந்து ஆதாரப்பூர்வமாகப் பதிவுசெய்யப்பட்ட எந்த அறிவிப்பும் இல்லை. நபியவர்கள் இணைவைப்பாளர்களுக்கு ஸூறா அந்நஜ்மை ஓதிக்காட்டியதாகவும் அப்போது 'நீங்கள் லாத்தையும் உஸ்ஸாவையும் கவனித்தீர்களா? மனாத் எனும் மூன்றாவது சிலையையும் பார்த்தீர்களா?' எனும் வசனத்தை அடைந்தபோது, ஷைத்தான் நபியவர்களின் நாவில் 'அவர்கள் உயர்ந்து பறக்கும் பறவைகள். அவர்களின் பரிந்துரை ஆதரவு வைக்க வேண்டும்' என்கிற வார்த்தைகளைப் போட்டதாகவும், இதனால் இணைவைப்பாளர்கள் தங்கள்

13

மதீனாவில் அறப்போர் பற்றிய கட்டளை

❀

முஸ்லிம்கள் மதீனாவுக்குச் சென்று அங்கு அன்ஸாரீகளும் முஹாஜிர்களும் ஒன்றிணைந்ததும், அல்லாஹ் அவர்கள்மீது ஜிஹாது[39] எனும் அறப்போரைக் கட்டாயமாக்கினான். ஆனால், அதற்கு முன்னர் அவர்கள் ஜிஹாது செய்வதிலிருந்து தடுக்கப்பட்டிருந்தார்கள்.

كُفُّوا أَيْدِيَكُمْ

உங்களது கரங்களைத் தடுத்துக்கொள்ளுங்கள் (4:77)

என்று அவர்களுக்குக் கூறப்பட்டிருந்தது. அல்லாஹ் இதுபற்றிப் பின்வருமாறு குறிப்பிடுகின்றான்:

كُتِبَ عَلَيْكُمُ الْقِتَالُ وَهُوَ كُرْهٌ لَكُمْ وَعَسَى أَنْ تَكْرَهُوا شَيْئًا وَهُوَ خَيْرٌ لَكُمْ وَعَسَى أَنْ تُحِبُّوا شَيْئًا وَهُوَ شَرٌّ لَكُمْ وَاللَّهُ يَعْلَمُ وَأَنْتُمْ لَا تَعْلَمُونَ

நம்பிக்கையாளர்களே! அல்லாஹ்வின் பாதையில் போர்புரிவது, மனதிற்கு வெறுப்பாக இருந்தபோதிலும் அது உங்கள்மீது கடமையாக்கப்பட்டுள்ளது. உங்களுக்குப் பயனுள்ள ஒரு விசயத்தை நீங்கள் வெறுக்கலாம், அல்லாஹ்வின் பாதையில் போர்புரிவதை நீங்கள் வெறுப்பதுபோன்று. எதிரிகளை வென்று விடுதல், அல்லாஹ்வின் வார்த்தையை மேலோங்கச் செய்தல் போன்ற மிகப் பெரிய நன்மைகளையும் அதில் நீங்கள் பெறலாம்.

---

39 ஜிஹாது (جِهَادٌ): சொல்லாலும் செயலாலும் ஒருவர் தம்மால் இயன்ற எல்லை வரை முயற்சி செய்தல் என்பது இதன் சொல் விளக்கம். இஸ்லாமிய வழக்கில் அல்லாஹ்வின் வார்த்தையான கலிமா வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர யாருமில்லை என்பதை மேலோங்கச் செய்வதற்காகப் போரிடுவதைக் குறிக்கும். எனினும், சூழ்நிலைக்கேற்றவாறு இது கடமையாகும். தன் மனஇச்சைக்கு எதிராகவும் ஷைத்தானுக்கு எதிராகவும் போரிடுதல் எல்லாக் காலத்திற்குமானதாக இருக்கும். (ப.கு.)

2

யானைப்படை வரலாறு

❀

யானைப்படையினரின் வரலாறு பற்றி முஹம்மது இப்னு இஸ்ஹாக் ﵀ அறிவித்திருப்பதாவது: அபிசீனிய மன்னர் நஜாஷீயின் பிரதிநிதியாக யெமன் தேசத்தை அப்றஹா இப்னு அஸ்ஸபாஹ் என்பவன் ஆட்சி செய்துவந்தான். மக்கள் ஹஜ்ஜு செய்வதற்காக மக்கா செல்ல தயார் செய்துகொண்டிருந்ததைக் கண்ணுற்றான். அவன் யெமனில் உள்ள ஸன்ஆ நகரில் ஒரு கிறித்துவ தேவாலயத்தைக் கட்டினான். பின்பு மன்னர் நஜாஷீக்கு எழுதிய கடிதத்தில் 'நான் உங்களுக்காக ஒரு தேவாலயத்தைக் கட்டியுள்ளேன். ஹஜ்ஜுக்காகச் செல்கின்ற அறபுப் பயணிகள் இதனை நோக்கித் திரும்பும் வரை நான் ஓயமாட்டேன்' என்று குறிப்பிட்டிருந்தான். பனூ கினானா குலத்தைச் சேர்ந்த ஒருவன் அப்றஹாவின் இந்தத் திட்டத்தைக் கேள்விப்பட்டு ஒரு நாள் இரவு அந்த தேவாலயத்திற்குள் நுழைந்து அதன் மூலஸ்தானத்தில் மலத்தைப் பூசிவிட்டு ஓடிவிட்டான். 'இதனைச் செய்வதற்கு எவனுக்குத் துணிச்சல் வந்தது' என்று அப்றஹா கேட்டதற்கு, 'கஅபா ஆலயம் இருக்கின்ற மக்காவைச் சேர்ந்த ஒருவன் நீங்கள் சொன்னதைக் கேள்விப்பட்டு இதனைச் செய்திருக்கிறான்' என அவனுக்குப் பதில் அளிக்கப்பட்டது. இதனைக் கேட்டதும் அப்றஹா 'கஅபாவிற்குச் சென்று அதனை இடித்து அழிக்காமல் விடமாட்டேன்' என சூளுரைத்தான். உடனே, மன்னர் நஜாஷீக்கும் தனது நோக்கத்தைத் தெரியப்படுத்தி கடிதம் எழுதினான். மன்னரிடம் மிகப் பெரிய யானை ஒன்று இருந்தது. அதன் பெயர் மஹ்மூது. உருவத்தாலும் சக்தியாலும் பலத்தாலும் அது போன்ற பெரிய யானையை எவரும் பார்த்திருக்கமாட்டார். அந்த யானையைத் தன்னிடம் அனுப்பும்படி அப்றஹா வேண்டவே, மன்னரும் அதனை அவனுக்கு அனுப்பி வைத்தார்.

அப்றஹா மக்காவை நோக்கிப் படையெடுத்தான். இதுபற்றிக் கேள்விப்பட்ட அறபியர்கள் பெரிதும் கவலை கொண்டார்கள்.

3

அபிசீனியாவிற்கு முதல் ஹிஜ்றத்

❀

ஐந்தாவது ஆண்டில் துன்புறுத்துதல் மிகவும் தீவிரமாக இருந்த தால், நபிகளார் ﷺ, தமது தோழர்களை அபிசீனிய நாட்டிற்கு இடம்பெயர்ந்து செல்லுமாறு ஆணையிட்டார்கள்.[58] 'அங்கு ஒரு மனிதர் இருக்கின்றார். அவர் தம்முடைய தேசத்து மக்களுக்கு அநியாயம் இழைப்பதில்லை' என்று நபிகளார் குறிப்பிட்டார்கள். *(அஹ்மது 1/203)*

குறைஷிகள் வணிகம் புரிகின்ற ஒரு நாடாகும் அபிசீனியா. முதன்முதலில் அபிசீனியாவிற்குப் பன்னிரெண்டு ஆண்களும், நான்கு பெண்களும் சென்றார்கள். அவர்களில் உஸ்மான் இப்னு அஃப்பான் ﷺ, அவரது மனைவியும் நபிகளாரின் மகளுமான ருகையா ﷺ ஆகியோர் அடங்குவார்கள். சிலர் தாங்கள் இஸ்லாமை ஏற்றுக்கொண்டதை மறைத்துக்கொண்டு மக்காவிலேயே இருந் தார்கள்.

மேலும், ஸுபைர், அப்துற் றஹ்மான் இப்னு அவ்ஃப், இப்னு மஸ்ஊது, அபூ ஸலமா, அவரது துணைவியார் என்று ஒருவர் பின் ஒருவராக இரகசியமாகச் சென்றார்கள். அவர்கள் கடற் கரையை அடைந்தபோது அங்கு இரண்டு வணிகக் கப்பல்கள் நின்றுகொண்டிருந்தன. அல்லாஹ்வின் அருளால் அந்தப் பாய்மரக் கப்பல்கள் மூலமாக அவர்கள் அபிசீனியா சென்றடைந்தார்கள். குறைஷிகள் அவர்களைத் துரத்திச் சென்றார்கள். ஆனால், பிடிக்க முடியவில்லை. அவர்கள் ரஜப் மாதம் அங்குச் சென்று ஷஅபான் மற்றும் றமளான் மாதங்கள் முழுமையும் அபிசீனியாவில் தங்கி

---

58 வடகிழக்கு ஆப்பிரிக்காவில் எத்தியோப்பியா எனும் பெயரில் இன்று அழைக்கப்படுகிறது இந்தத் தேசம். சூடானுக்கும் சோமாலியாவுக்கும் நடுவில், கென்யாவுக்கு அருகில், செங்கடலின் கரையோரத்தில் இருக்கிறது. (ப.கு.)

1

ரஸூல் ﷺ மதீனாவில் குடியேற்றம்

❀

நபிகளார் ﷺ மதீனாவில் குடியமர்ந்ததும் அல்லாஹ் அவர்களுக்குத் தன் உதவியை அளித்து ஆதரித்தான். இறைநம்பிக்கையாளர்களுக்கும் உதவினான். அவர்களுக்கு மத்தியில் முந்தைய காலத்தில் இருந்த விரோதப் போக்கை அகற்றி அவர்களது இதயங்களை ஒன்றிணைத்தான். அன்ஸார்கள் நபிகளாருக்குப் பாதுகாப்பு அளித்தார்கள். அதேநேரத்தில் அறபியர்களும் யூதர்களும் ஒன்றிணைந்து நபிகளார்மீது தாக்குதல்கள் தொடுத்தார்கள். அவர்களுக்கு எதிராகப் போரிடவும் தயாரானார்கள். எனினும், அல்லாஹ் முஸ்லிம்கள் தங்களது பலம் அதிகரிக்கின்ற வரை போரிடாமல் இருக்குமாறும், அவர்களை மன்னிக்குமாறும் கட்டளையிட்டான். பின்னர், அல்லாஹ் நபிகளார் ﷺ போரிடுவதற்கு அனுமதி வழங்கினான். ஆனால், அவர்கள்மீது அதைக் கடமையாக்கவில்லை. இதுபற்றி அவன் கூறியிருப்பதாவது:

أُذِنَ لِلَّذِينَ يُقَاتَلُونَ بِأَنَّهُمْ ظُلِمُوا وَإِنَّ اللَّهَ عَلَىٰ نَصْرِهِمْ لَقَدِيرٌ

நம்பிக்கையாளர்களுடன் போர்த்தொடுக்கும் இணைவைப்பாளர்களுக்கு எதிராகப் போரிடுவதற்கு அல்லாஹ் நம்பிக்கையாளர்களுக்கு – அவர்கள் அநீதி இழைக்கப்பட்டுள்ளார்கள் என்பதனால் – அனுமதியளித்துவிட்டான். நிச்சயமாக அல்லாஹ் போரில்லாமல் நம்பிக்கையாளர்களுக்கு உதவிசெய்ய ஆற்றலுடையவன்தான். ஆயினும், அவன் நிராகரிப்பாளர்களுடன் போரிடுவதைக்கொண்டு நம்பிக்கையாளர்களைச் சோதிக்கிறான். *(குர்ஆன் 22:39)*

இதுதான் போர் பற்றி இறக்கியருளப்பட்ட முதல் வசனமாகும்.

பின்னர், தங்களுடன் போர் புரிவோருடன் தற்காப்புக்காகப் போர் செய்வதை முஸ்லிம்களுக்கு அல்லாஹ் கடமையாக்கினான். இதுபற்றி அல்லாஹ்,